# 7 பாரமற்ற விளையாட்டுப் பிராணிகள் நிர்மாணித்தல்

## 7.1 துண்டுத் துணிகளைக் கொண்டு விளையாட்டுப் பிராணிகள் நிர்மாணிப்போம்








ஆதிகாலம் தொட்டு வீட்டுப் பெண்மணிகள் தமது வீட்டு உபயோகத்தின் பொருட்டு வீட்டுத் தேவைக்குரிய துணிமணிகளைத் தயாரித்துக் கொள்ளும் பொழுதும், ஆடைகளைத் தைக்கும் பொழுதும் பயன்படுத்தும் துணிகளில் எஞ்சிய பகுதிகளை உபயோகப்படுத்தி பல்வேறு வீட்டுப் பொருட்களை நிர்மாணித்துள்ளனர். உதாரணமாகச் சுவர் அலங்கரிப்பு, குவுன் கவர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மிகுதியாகும் துண்டு துணிகளைப் பல்வேறு வடிவங்களில் வெட்டி அவற்றை ஒன்றுடன் ஒன்றை வர்ணம் பகுதி பொருந்தும் வகையில் தொடர்பு படுத்தி அலங்கார நிர்மாணிப்புக்களைத் தயாரித்துக் கொள்ளலாம். உதாரணமாக துணித் துண்டுகளை இணைத்து இலகுவான விளையாட்டுப் பொருள் நிர்மாணித்தல் இன்று பெரும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

## பாரமற்ற விளையாட்டுப் பொருட்களை நிர்மாணிக்கும் பொழுது முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய காரணங்கள்

★ அந்த அந்தப் பிள்ளைகளின் வயதிற்கும் அனுபவத்திற்கும் பொருந்தும் வகையில் பாரமற்ற விளையாட்டுப் பொருளை நிர்மாணித்தல்.

★ சிறு பிள்ளைகள் அதிகமாக விரும்பும் பிராணிகளின் மாதிரி உருவை நிர்மாணித்தல். உதாரணமாக : முயல், நாய், பூனை, கரடி போன்றவை.

★ பிள்ளைகளிடத்து மகிழ்ச்சி உணர்வை (IMOTIONS) ஏற்படுத்தும் வகையில் பாரமற்ற விளையாட்டுப் பொருளை நிர்மாணித்தல்.

★ பிள்ளையின் சௌக்கியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தாத துணி வகைகளை நிர்மாணிப்பின் பொருட்டு தெரிவு செய்தல்.

★ விளையாடும் போது அவற்றின் பகுதிகள் கழராத வகையில் சிறப்பாகத் தைத்து இருத்தல்.

★ விளையாட்டுப் பிராணியிடம் பிள்ளைக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அவற்றின் வர்ணம் பொருத்தப் பாட்டைக் கொண்டிருத்தல்.

★ இந்த நிர்மாணிப்பை மென்மையாகப் பாரம் அற்ற தன்மையில் தயாரித்துக் கொள்ளல்.

★ முப்பரிமாண வடிவைப் பெறும் வகையில் அவற்றை நிர்மாணித்தல்.

பாரமற்ற விளையாட்டுப் பொருட்களை நிர்மாணிக்கும் பொழுது கீழ்க் குறிப்பிடும் சிறந்த வேலைப் பழக்கத்தையும், பாதுகாப்பு முன்னேற்பாடு பற்றியும் விளக்கத்தைப் பெற்று, அவற்றை பின்பற்றிக் கொள்ளுதல் மிக முக்கியமாகும்.

1. தைப்பதன் பொருட்டு ஆயத்தமாகும் பொழுது கைகளின் சுத்தம் தொடர்பாகக் கவனம் செலுத்துதலும், தைத்தபின்னர் இடத்தை உரிய முறையில் சுத்தமாக வைத்தல்.

2. ஊசி, கத்தரிக்கோல் போன்ற கூரிய உபகரணங்களைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பு படிமுறைகளைப் பின்பற்றுதல்.

3. பாரமற்ற விளையாட்டுப் பிராணி நிர்மாணிக்கும் பொழுது மாதிரி அளவிடை (BLOCK) வைத்துத் துணியை வெட்டும் போது துணியின் நீளப்பக்க நூல், குறுக்கு பக்க நூல், உறள் பற்றி அவதானம் செலுத்துதல்.

4. நிர்மாணிப்பு செய்யப்படும் பாரமற்ற விளையாட்டுச் சாமான் சிறந்த பூரணப் பாட்டைக் கொண்டு இருத்தல்.

## பாரமற்ற விளையாட்டுப் பொருள் நிர்மாணிப்பின் பொருட்டு தேவையான பொருட்களையும் உப கரணங்களையும் அறிந்து கொள்வோம்.

**பொருட்கள் :**

★ சிறு பிள்ளைகளின் சரீர சௌக்கியத்திற்குக் கேடுவிளைவிக்காத பல்வேறு வர்ணத்தையும் இழை இயல்புகளையும் கொண்ட துணிவகை.

★ துணியின் தன்மைக்கும், வர்ணத்திற்கும் பொருத்தமான பல்வேறு நூல் வகை.

★ உள்ளே அடைப்பதற்குப் பொருத்தமான பொருள்.
உதாரணம்:பஞ்சு, பொலிபில்.

★ மாதிரி அளவிடை (BLOCK) வெட்டுவதற்குப் பொருத்தமான தடித்த கடதாசி.

★ சன்னாலி காபன் கடதாசி.

★ ஒயில் கடதாசி/ ரிசு கடதாசி.

★ றிபன் வகை.

★ வெல்கோ ரேப் (Tape).

★ பிராணி நிர்மாணிப்புகளுக்கு கண், வாய், மூக்கு, இவற்றின் பொருட்டு பயன் படுத்தபடும் பல்வேறு பொருட்கள்.

**உபகரணம்**

★ தையல் இயந்திரத்திற்கும், கையால் தைப்பதற்கும் தேவையான ஊசி வகை. (துணியின் தடிப்பிற்கு ஏற்றதாக)

★ கத்திரிக் கோல் வகை.

★ கடுதாசி வெட்டும் கத்திரிக் கோல்.

★ துணி வெட்டும் கத்தரிக்கோல்.

★ சுவடு வரை சில்லு (Tarcing Wheel)

★ அளவு நாடா

★ குண்டூசி

★ அடிமட்டம்

★ நீதால்

★ 12 cm அளவு நீளமுடைய சக்தி பொருத்திய மரக் கூர் (பொலிபில் அடைப்பதற்கு)

பாரமற்ற விளையாட்டுப் பொருள் நிர்மாணிப்பு பிரசித்திபெற்று உள்ளதுடன், அதன் பொருட்டு அச்சிடப்பட்ட புத்தகங்கள், பத்திரிகைகள் பல வற்றைக் கடைகளில் பெறக்கூடியதாக உள்ளதுடன் (Internet) இணையத்தளத்தில் கூட இதன் பொருட்டு வச திகள் உள்ளன. ஆனால் அவற்றின் பொருட்டு குறிப்பிடப்படும் மாதிரி அளவிடை (BLOCK) சிறு அளவுப் பிரமாணத்தில் முன்வைக்கப் பட்டு இருப்பதுடன், அவற்றை தேவைக்கு ஏற்ற அளவுகளில் பெரிதாக்கி கொள்வதற்கு முடிதல் வேண்டும். தற்காலத்தில் அந்த (BLOCK) மாதிரி அளவிடையை போட்டோ கொப்பியின் மூலம் தேவையான அளவிற்கு பெரிதாக்குவதற்கு, அல்லது சிறிதாக்கி கொள்வதற்கு வசதி உள்ளது.எனினும் அது போன்ற வசதி இல்லாத சந்தர்ப்பத்தில் (BLOCK) கை பெரிதாக்கிக் கொள்வதற்கு ஏற்ற முறையை அறிந்து கொள்வோம்.






4





## செயற்பாடு 7.1

★ மேற்காணும் வடிவங்களை நன்றாக அவதானிக்கவும்.

★ அளவுப் பிரமாணம் மூன்றைக் கொண்ட சதுரறூல்க் கடதாசியை எடுத்து மேற்காணும் வடிவை மூன்று பிரமாணங்களில் வரைந்து கொள்க.

## செயற்பாடு 7.2

பாரமற்ற விளையாட்டுப் பொருள் நிர்மாணிப்புப் பற்றி விளக்கத்தைப் பெற்ற நீங்கள், பெற்ற அறிவைப் பயன்படுத்தி, சிறு பிள்ளைகளுக்குப் பொருத்தமான பென்குயின், செல்ல நாய்க்குட்டி ஆகியவற்றை நிருமாணிப்பதன் பொருட்டு ஆயத்தமாவோம். அதன் பொருட்டு உமக்குத் தேவையான பொருட்கள்,சுருக்கமான அறிவுரைகள் சிலவும் தரப்படுள்ளது.



**தேவையான பொருட்களும் உபகரணங்களும்**

★ வெள்ளை நிற பொல்ட் துணி (1 அங்குலம் X 1 அங்குலம் அளவு)

★ கறுப்பு நிறம் அல்லது கடும் நீல நிற பொல்ட் துணி (1 1/2 அங்குலம் × 1 1/2 அங்குலம் அளவு)

★ தைப்பதற்கு தேவையான ஊசி.

★ வெள்ளை, கறுப்புநிற பருத்தி நூல்.

★ நிரப்புவதற்கு உரிய ஊடகம். (பஞ்சு/பொலிபில்)

★ தடிப்பான கடதாசி.

★ பொத்தான் 2 (கண் வைப்பதற்கு பொருத்தமான)

★ ஒயில் கடதாசி / ருசுக் கடதாசி

★ பென்சில், கத்தரிக்கோல்(கடதாசி வெட்டுதற்கு, துணி வெட்டுதற்கு)


பஞ்சு நிரப்புவதற்கு
3
கால்பகுதி - 4
வெள்ளை நிறம் - 2
நீலம்/கறுப்பு நிறம் - 2
சொண்டு
பகுதி - 2
வெள்ளை நிறம் - 1
கறுப்பு நிறம் - 2
பஞ்சு
நிரப்புவதற்கு
C
D
A
உடற்பகுதி
(பகுதி - 2)
நீலம்/ கறுப்பு
நிற துண்டு -2
B
பஞ்சு
நிரப்புவதற்கு


A
வயிற்றுப் பகுதி
வெள்ளை நிறத்
துண்டு - 1
B
சிறகுப் பகுதி - 4
வெள்ளை நிறம் -2
கறுப்பு/ நீல நிறம் - 2

- ★ மேலே தரப்பட்டு உள்ள மாதிரி அளவிடை (BLOCK)களை நன்றாக அவதானிக்கவும்.
- ★ ஒயில் கடதாசி/ ரிசுக்கடதாசியைக் கொண்டு அந்த மாதிரி அளவீட்டை பதித்து எடுத்துக் கொள்ளவும்.
- ★ தையலுக்குரிய காபன் கடதாசியைப் பயன்படுத்தி தடித்த கடதாசில் வைத்து பதித்தெடுத்த மாதிரி அளவிடையை வரைந்து கொள்க. (உடை இரேகையினால் காட்டப்பட்டுள்ள வாறு தைப்பதற்குத் தேவையான இடத்துடன்)
- ★ அதைக் கடதாசி வெட்டும் கத்தரிக் கோலினால் மாதிரி அளவிடைப் பகுதிகளை வெட்டி எடுக்கவும்.
- ★ அந்த மாதிரி அளவிடையை வைத்து கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப துணிப் பகுதிகளை வெட்டி எடுக்கவும்.
- ★ (பென்சில், கத்தரிக்கோல், கடதாசி வெட்டுதற்கு, துணி வெட்டுதற்கு)

    - ★ உடற் பகுதிகள் -2 (கறுப்பு நிறம்)
    - ★ வயிற்றின் கீழ்ப்பகுதி - 1 (வெள்ளை நிறம்)
    - ★ இறகுப் பகுதி - 4 (வெள்ளை நிறத்தில் - 2 கறுப்பு நிறத்தில் -2)
    - ★ சொண்டுப் பகுதி - 2 (கறுப்பு நிறத்தில் -1,வெள்ளை நிறத்தில் - 1)
    - ★ காற் பகுதி - 4 கறுப்பு நிறத்தில் - 2 வெள்ளை நிறத்தில் - 2)

- ★ மாதிரி அளவிடையில் குறித்துள்ள ஆங்கில எழுத்தினால் காட்டப்படுள்ள பகுதிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து, உடற்பகுதியையும், வயிற்றுப் பகுதியையும் ஒன்றாக வைத்து (புறப்பக்கம் வெளியல் இருக்கும் வகையில்) நூல் ஓடி, பின்னர் நிலையாக தைத்துக் கொள்க.
- ★ நிலையான தையலைத் தைக்கும் பொழுது மாதிரி அளவிடையில் காட்டி உள்ளபடி பஞ்சை நிரப்புவதற்கு (✳) நட்சத்திர அடையாளம் காட்டப்பட்டு உள்ள பகுதியைத் தைக்காமல் விடவும்.
- ★ நிலையான தையல் வெட்டுப்படாத வகையில் மாதிரி அளவிடையின் கரையில் இடைக்கிடை வெட்டுகள் பயன்படுத்தி நிர்மாணிப்பின் சரியான வடிவை சிறப்பாக பெறமுடியும்.
- ★ பஞ்சு நிரப்புவதற்கு விட்டுள்ள இடைவெளியின் மூலம் தைத்துக்கொண்ட பென்குயின் உடற் பகுதியை மறுபக்கத்திற்குத் திருப்பி கத்தரிக் கோல் துணையின் மூலம் வடிவத்தை நன்றாகச் சீர்ப்படுத்திக் கொள்க.

★ சொண்டுக்காக இருவர்ணங்களில் வெட்டி எடுத்த துணிப் பகுதி இரண்டையும், புறப்பக்கத்தில் பொருத்தி, சுற்றிவர கரை வெட்டு பயன்படுத்தி நல்ல பக்கத்திற்கு திருப்பிக் கொள்க.

★ காற் பகுதி இரண்டின் பொருட்டு இரண்டு வர்ணத்துண்டுப் பகுதி நான்கில் கறுப்பு, வெள்ளை,பகுதி இரண்டைப் பொருத்தி நூல் ஓடிப் பின் நிலையான தையல் தைத்துக் கொள்க.

★ வளைவான பகுதியில் இடைக்கிடை வெட்டுகள் பயன்படுத்தி நல்ல பக்கத்திற்கு திருப்பிக் கத்தரிக் கோல் நுணியினால் வடிவைச் சீர்செய்து கொள்க.

★ சிறகு இரண்டின் பொருட்டு இரண்டு வர்ணத்தில் பகுதி நான்கை வெட்டி மறுபக்கத்தில் (புறப்பக்கம்) நூல் ஓடி பின் நிலையான தையல் (✳ நட்சத்திரம் போட்டு உள்ள இடத்தை விட்டு) தைத்து சுற்றிவர கரை வெட்டுகள் பயன்படுத்தி, பின்னர் தைக்காத பகுதியின் மூலம் நல்ல பக்கத்திற்கு திருப்பிக் கொள்க.

★ தைத்து கொள்ளப்பட்ட பென்குயின் உடற் பகுதிக்கும், சொண்டிற்கும், கால்கள் இரண்டிற்கும், நன்றாகப் பிரித்து எடுத்துக் கொண்ட பொலிபில் அல்லது பஞ்சை அடைத்து நிரப்பிக் கொள்க.

★ உடற் பகுதிக்கும், கால்கள் இரண்டிற்கும் பஞ்சை உள்ளே அடைத்து, திறந்த பகுதிகளை கறுப்பு, வெள்ளை நூலைப் பயன் படுத்தி சிறந்த பூரணப்பாடு உடையதாக தைத்துக் கொள்க.

★ சொண்டுப் பகுதியின் பஞ்சு அடைத்த ஓட்டைப் பகுதியை பென்குயினின் உடற்பகுதியில் மாதிரி அளவிடையில் காட்டி இருப்பது போல், CD கோட்டில் வைத்து கறுப்பு/ வெள்ளை நூலால் தைத்துக் கொள்க.(சிறந்த பூரணப்பாட்டைக் கொண்டதாக) (கறுப்பு வர்ணம் வெளிப்புறத்தில் இருக்கும்வகையில்)

★ சிறகுகள் இரண்டின் ஓட்டைப் பகுதியை தைத்து உடற்பகுதியுடன் ✳ அடையாளம் இட்டு உள்ள இடத்தில் தைத்துக் கொள்க.(கறுப்பு நிறம் வெளிப்புறத்தில் இருக்கும் வகையில்)

★ கால் கை இரண்டையும் (பென்குயினின் படத்தில் காட்டப்படும் தன்மையில் உடற் பகுதியில் வைத்து தைத்துக் கொள்க). (கறுப்பு வர்ணம் வெளிப் பக்கத்தில் இருக்கும் வகையில்)

★ கண்கள் இரண்டின் பொருட்டு பட்டின் இரண்டை நன்றாக இறுக்மாக இருக்கும் வகையில் தைத்துக் கொள்க.

★ தேவை அற்ற நூல் பகுதி இருந்தால் அவற்றை வெட்டி அகற்றி நிர்மாணிப்பிற்குச் சிறந்த பூரணப்பாட்டை செய்து கொள்க.

## செயற்பாடு

★ தரப்பட்டுள்ள செல்லப் பிராணி நாய்க் குட்டியின் வடிவ மாதிரி அளவிடையை நன்றாக அவதானிக்கவும்.

★ உமக்கு இலகுவான முறையைப் பயன்படுத்தி மாதிரி அளவிடையை தேவையான அளவிற்குப் பெரிதாக்கிக் கொள்க.

★ தேவையான பொருட்களை பெற்றுக் கொண்டு (ஆசிரியரின்) அறிவுரைப்படி படத்தில் காட்டி உள்ள செல்லப்பிராணி நாய்க் குட்டியை தைத்துக் கொள்க.

